# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

# 2015

## කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව

## முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

## DEPARTMENT OF MANAGEMENT AUDIT


| | | |
|---|---|---|
| මුදල් අමාත්‍යාංශය | நிதி அமைச்சு, | Ministry of Finance |
| මහලේකම් කාර්යාලය | செயலகம் | The Secretariat |
| කොළඹ 01. | கொழும்பு 01. | Colombo 01. |

அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, இலங்கைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.


**முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்**

**நிதி அமைச்சு,**

**செயலகம்**

**கொழும்பு 01.**

# உள்ளடக்கம்


| இல. | | பக்கம் |
|---|---|---|
| 01. | திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் பணிகள் | 1 |
| 1.1 | நோக்கு | 1 |
| 1.2 | செயற்பணி | 1 |
| 1.3 | குறிக்கோள் | 1 |
| 1.4 | பணிகள் | 2 |
| 02. | நிதி நிருவாகம் | 3 |
| 03. | பௌதீக செயலாற்றுகை | 4 |
| 3.1 | உள்ளகக் கணக்காய்வு அலுவலர்களின் ஆற்றலை விருத்தி செய்தல் | 4 |
| 3.2 | உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை வழங்குதல் | 5 |
| 3.3 | முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக்களுக்கான திறைசேரியின் பிரதிநிதித்துவத்தின் மூலம் அரச துறையின் உள்ளகக் கணக்காய்வினை பலப்படுத்தல் | 6 |
| 3.4 | நிதி அமைச்சினதும் திறைசேரித் திணைக்களங்களினதும் முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகள் | 6 |
| 3.5 | விசேட விசாரணை மற்றும் கணக்காய்வுப் பணிகள் | 7 |
| 3.6 | புதிய அணுகுமுறைகள் | 11 |
| 04. | மனிதவள முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகம் | 12 |
| 4.1 | திணைக்களத்தின் அமைப்புரீதியான கட்டமைப்பு | 12 |
| 4.2 | 2015.12.31 ஆம் திகதியில் பணியாட்கள் | 13 |
| 4.3 | 2015 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் திறன்விருத்தி நடவடிக்கைகள் | 15 |
| **4.3.1** | 2015 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சிகள் | 15 |
| **4.3.2** | 2015 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயிற்சிகள் | 17 |
| 4.3.3 | செயலாற்றுகை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 19 |

# 01. திணைக்களத்தின், நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் பணிகள்

## 1.1 நோக்கு

அதி உயர் செயலாற்றுகையையும் பொறுப்பையும் கொண்ட அரச சேவையொன்றின் பொருட்டு பெறுமதியைச் சேர்க்கின்ற மிகச் சிறந்த முகாமைத்துவ கணக்காய்வுப் பங்குதாரர் நிலையை அடைதல்

## 1.2 செயற்பணி

முகாமைத்துவக் கணக்காய்வினூடாக அரச சேவையின் பொறுப்புக்களை விருத்தி செய்வதற்கும் பெறுமதியைச் சேர்ப்பதற்கும் சுயாதீனமாக நோக்கத்தை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்குதல்.

## 1.3 குறிக்கோள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்.
2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மூலம் உள்ளகக் கணக்காய்விற்கு வலுவூட்டல்.
3. முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை விருத்தி செய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல்.
4. நிதி அமைச்சு மற்றும் பொது திறைசேரித் திணைக்களங்களின் முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் உயர் முகாமைத்துவத்திற்கு ஒத்துழைத்தல்.
5. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முகாமைத்துவ கணக்காய்வு செயற்பாடுகளுக்கு வலுவூட்டல்.
6. விசேட விசாரணைப் பணிகள் மூலம் அரச துறையில் ஏற்படுகின்ற மற்றும் ஏற்படக் கூடிய மோசடிகளை கண்டுபிடித்தல் மற்றும் அவ்வாறான நிலைகள், சம்பவங்களைத் தடுப்பதற்கான சிபாரிசுகள் மற்றும் நிவாரணத் திட்டங்களை பரிந்துரை செய்தல்.

## 1.4 பணிகள்

2008.01.25 ஆம் திகதிய 08/0200/306/012 ஆம் இலக்கத்தைக் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் திறைசேரியிடமிருந்து கிடைக்கும் உதவிகளை தொடர்ந்தும் பலப்படுத்தும் நோக்கில், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம் திறைசேரியின் திணைக்களமொன்றாக 2008.02.01 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சுயாதீன அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளுக்கு வழிகாட்டுவதும் அதன் மூலம் அந்த நடவடிக்கைகளை பலப்படுத்துவதும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வின் தரத்தையும் செயற்திறனையும் மேம்படுத்துவதற்கான அடிப்படை நிறுவனமாகத் தொழிற்படுதல்.
2. நிதி அமைச்சு, திறைசேரித் திணைக்களங்கள் மற்றும் அதன் கீழுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளல்.
3. உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல்.
4. உள்ளகக் கணக்காய்வு அலகுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
5. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வாளர்களின் உள்ளகக் கணக்காய்வுத் திறன்களை விருத்தி செய்தல்.
6. நிதி அமைச்சில் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துதல், ஏனைய அமைச்சுக்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் வழிகாட்டுதல்.
7. அரச துறைகள் பின்பற்றுகின்ற அபாய மதிப்பீட்டு முறைமையின் போதுமான தன்மையைக் கணிப்பிடுதல்.
8. விசேட விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 02. நிதி நிருவாகம்

2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் செலவினத் தலைப்பு இலக்கம் 324, நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 01 மற்றும் கருத்திட்ட இலக்கம் 01 இன் கீழ் இந்தத் திணைக்களத்திற்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது 2015 ஆம் ஆண்டின் ஏற்பாடுகள் திருத்தப்பட்டுள்ளன. அந்த ஏற்பாடுகளை செலவு செய்த விதம் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| செலவின விபரம் | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூபா) | மேலதிக ஒதுக்கீடு (ரூபா) | நி.ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல் (ரூபா) | உண்மைச் செலவினம் (ரூபா) | மீதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம் (அ)** | **30,090,000** | **370,300** | **-** | **30,389,443** | **70,857** |
| **ஆளுக்குரிய வேதனாதிகள்** | 22,030,000 | | 40,123<br>(40,123) | 21,959,150 | **70,850** |
| **ஏனைய செலவினம்** | 8,060,000 | 370,300 | 532,405<br>(532,405) | 8,430,293 | 7 |
| **மூலதனச் செலவினம் (ஆ)** | **1,500,000** | | | **1,310,924** | **189,076** |
| **2001 கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள்** | | | | | |
| **2002 இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்களைப் பழுதுபார்த்தல்** | 200,000 | | | 192,948 | 7,052 |
| **2102 தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள்** | 200,000 | | | 103,224 | 96,776 |
| **2103 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்** | 600,000 | | | 521,697 | 78,303 |
| **2401 திறன் விருத்தி** | 500,000 | | | 493,055 | 6,945 |
| **முழு மொத்தம் (அ)+ (ஆ)** | **31,590,000** | **370,300** | | **31,700,367** | **259,933** |

### அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு

2015 ஆம் ஆண்டுக்காக இந்தத் திணைக்களத்தின் அரசாங்க அலுவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணம் பீ கணக்கின் விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | அனுமதிக்கப்பட்ட எல்லை (ரூ.) | உண்மைச் செலவினம் (ரூ.) |
|---|---|---|
| **உச்ச செலவின எல்லை** | **2,385,000** | **1,451,572** |
| **ஆகக் குறைந்த கிடைப்பனவு எல்லை** | **1,250,000** | **1,750,812** |
| **ஆகக் கூடிய வரவு மீதி எல்லை** | **10,000,000** | **6,052,647** |

# 03. பௌதீக செயலாற்றுகை

## 3.1. உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல்

உள்ளகக் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் பணியாற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் தொழில்சார் அறிவினை மேம்படுத்துவதற்காகவும் கணக்காய்வு சம்பந்தமான காலத்திற்கேற்ற தகவல்களை வழங்குவதற்காகவும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களமானது தொடர்ச்சியாக அவர்களுக்கு ஒத்துழைத்து வருகின்றது. அந்த நோக்கத்திற்காக 2015 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களத்தினால் பின்வரும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

| இடம்பெற்ற திகதி | செயலமர்வின் தலைப்பு | பங்குபற்றியோர் |
|---|---|---|
| 2015.08.06 | அரச துறையில் கணக்கீட்டுத் தரங்கள் பற்றிய செயலமர்வு | அமைச்சுக்களின்/ மாவட்டச் செயலகங்களின் /திணைக்களங்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2015.10.13 | தற்கால தகவல் தொழில்நுட்பச் சூழலில் உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கு உள்ள சவால்கள் பற்றிய செயலமர்வு | அமைச்சுக்களின்/ மாவட்டச் செயலகங்களின் /திணைக்களங்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2015.11.05 | பெறுகை உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் பெறுகை வழிகாட்டல் குறிப்பின் காலத்திற்கேற்ற மாற்றங்கள் பற்றிய செயலமர்வு | அமைச்சுக்களின்/ மாவட்டச் செயலகங்களின் /திணைக்களங்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2015.12.04 | தகவல் தொழில்நுட்ப பற்றிய நடைமுறைப் பயிற்சிச் செயலமர்வு | அமைச்சுக்களின்/ மாவட்டச் செயலகங்களின் /திணைக்களங்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் |

## 3.2 உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை வழங்குதல்

அரசாங்க நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வுக்காக தற்போது காணப்படும் வழிகாட்டல்களை தொடர்புடைய விடயத் துறைகளுக்கு இணங்கியதாக விசேடமாகத் தயாரிப்பதன் மூலம் அந்தத் துறைகளின் கணக்காய்வு நடவடிக்கைகளை மிகவும் செயற்திறனுடையதாகவும் வினைத்திறனுடையதாகவும் மேற்கொள்வதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 3.2.1. செயலாற்றுகைக் கணக்காய்வு சம்பந்தமான வழிகாட்டல்கள்

பொது மக்களின் பணத்தின் மூலம் தொழிற்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்கு நடவடிக்கைகளின் தன்மை என்பவற்றைப் பரிசீலனை செய்து அந்த நிறுவனங்களின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற சகல நோக்கங்களும் நிறைவேறுவது பற்றிப் பரிசீலனை செய்யும் நடவடிக்கையொன்றாக அந்த நிறுவனங்களில் தொழிற்படுகின்ற பொருளாதார செயற்திறனையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்தும் பொருட்டு கணக்காய்வு நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதற்காக செயலாற்றுகைக் கணக்காய்வு வழிகாட்டல் வரைவொன்று 2015 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன. இந்த வரைவில் மேலும் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில், உள்ளகக் கணக்காய்வு, நிதித் துறைகள் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிபுணர்களுடன் பகுப்பாய்வு செய்து திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் 2016 ஆம் ஆண்டில் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2.2 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் விசேட விசாரணைகளை நடாத்துவது சம்பந்தமான வழிகாட்டல்கள்

உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கு விசேட விசாரணைகளை நடாத்துவதற்கு ஒப்படைக்கப்படுகின்ற கடமைகளின் போது வழிகாட்டுவதற்காக வழிகாட்டல் கோவையொன்றினை தாபன விதிக் கோவையில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் சம்பந்தமாகக் காணப்படுகின்ற அறிவுரைகளைப் பயன்படுத்தி வரைவுசெய்துள்ள அதேவேளையில், தொடர்புடைய துறைகளின் நிபுணர்களின் கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தி திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் 2016 ஆம் ஆண்டில் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக்களுக்கான திறைசேரியின் பிரதிநிதித்துவத்தின் மூலம் அரச துறையின் உள்ளகக் கணக்காய்வை பலப்படுத்தல்

அமைச்சுக்களன் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுவுக்காக திறைசேரியின் பிரதிநிதிகளாக குழுவின் அங்கத்தவர் என்ற வகையில் இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றுகின்றனர். அந்த அலுவலர்களினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை வினைத்திறனுடையதாக தொடர்ச்சியாக நடாத்துவது பற்றிய வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை பலப்படுத்துதல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் கணக்காய்வு விசாரணைகளின் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்ற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடி, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேவையான ஆலோசனைகளை வழங்குவதும், அதன் பிரகாரம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய பின்னூட்டல்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் அரசாங்கத் துறையின் முகாமைத்துவ நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு பங்களிப்பை வழங்கியுள்ளது.

சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டினுள் 50 அமைச்சுக்களில் நடாத்தப்பட்ட 134 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், 05 திணைக்களங்களில் நடாத்தப்பட்ட 17 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், பாராளுமன்ற சபாநாயகரின் அலுவலகம், சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், அரசாங்க சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, தேசிய கல்வி ஆணைக்குழு, போன்ற அரசாங்க நிறுவனங்களில் 16 முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

## 3.4. நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் திணைக்களங்களது முகாமைத்துவ கணக்காய்வுகள்

நிதி அமைச்சு மற்றும் திறைசேரித் திணைக்களங்கள் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வை மேற்கொள்வது இந்தத் திணைக்களத்தின் முன்னணிப் பணியாகக் கருதப்படுகின்றது இந்தப் பணியானது, 2015 ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில், அதன் பிரகாரம், பின்வரும் சகல திணைக்களங்களுக்காகவும் ஒரு காலாண்டுக்கு ஒரு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வீதம் தலா 04 முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வீதம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் மூலம் அந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு தமது திணைக்களங்களினுள் பயன்வாய்ந்த முறையில் வினைத்திறனாக உள்ளக நிருவாக முறைகளையும் அதேபோன்று சிறந்த செயலாற்றுகை ஒன்றை மேற்கொள்வதற்கு பேருதவி கிடைத்துள்ளது.

நிதி அமைச்சு
தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களம்
சட்ட அலுவல்கள் திணைக்களம்

அரச கணக்குகள் திணைக்களம்
அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
அபிவிருத்தி நிதித் திணைக்களம்
வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்
அரச நிதித் திணைக்களம்.
முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்
தகவல் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்

மேலும், 2015 ஆம் ஆண்டில் ஏனைய அமைச்சுக்களின் விடயப் பரப்பிற்கு உட்பட்டு, மீண்டும் நிதி அமைச்சின் விடயப் பரப்பிற்கு உட்படுத்தப்பட்ட முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் பொருட்டு 03 முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் கருத்திட்ட முகாமைத்துவம் மேற்பார்வைத் திணைக்களத்தின் பொருட்டும் இறக்குமதி ஏற்றுமதித் திணைக்களத்தின் பொருட்டும் தலா 02 அறிக்கைகள் வீதமும் கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 3.5 விசேட விசாரணை மற்றும் கணக்காய்வுப் பணிகள்

நிதி அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் நிதி அமைச்சின் செயலாளருக்கும் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை நிதி அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரில் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது. அவ்வாறு அனுப்பப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் விசாரணை அறிக்கைகள் நிதி அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக குறித்த அமைச்சின் செயலாளருக்கு அல்லது குறித்த நிறுவனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், முறைப்பாட்டின் விசாரணைகளின் மூலம் வெளியாகும் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் என்பன மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பதே இதன் நோக்கமாகும்.

2015 ஆம் ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் 24 விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ள அதேவேளையில் வருடத்தினுள் சமர்ப்பிக்கப்பட்ட 14 முறைப்பாடுகளுக்காக தொடர்ந்தும் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட விசாரணைகள்

| தொடர் இல. | நிறுவனம் | விசாரணை |
|---|---|---|
| 01 | திவிநெகும திணைக்களம் | திவிநெகும திணைக்களத்தின் 7041562 ஆம் இலக்கக் கணக்கைப் பரிசீலனை செய்தல் |
| 02 | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் இடம்பெறுகின்ற ஊழல் மற்றும் மோசடி சம்பந்தமானது |
| 03 | லங்கா ச.தொ.ச. | திறைசேரிப் பிணையின் அடிப்படையில் அரிசி இறக்குமதி செய்தமை சம்பந்தமானது |
| 04 | அதுல பாலசூரிய மற்றும் கம்பனி | ஊழல் மற்றும் மதுவரி சம்பந்தமானது |
| 05 | பிரதேச அபிவிருத்தி வங்கி | தகவல் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்தமை சம்பந்தமானது |
| 06 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதித் திணைக்களம் | ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் சம்பந்தமானது |
| 07 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதித் திணைக்களம் | கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களுக்கு அழுத்தம் கொடுத்தமை சம்பந்தமானது |
| 08 | திவிநெகும திணைக்களம் | 2014 நவம்பர் மற்றும் டிசம்பர் மாத வவுச்சர்களை பரிசீலனை செய்தல். |
| 09 | இலங்கை சுங்கத் திணைக்களம் | வாசனைப் பொருட்களை களவாகக் கொண்டுவந்தமை சம்பந்தமானது |
| 10 | இலங்கை மத்திய வங்கி | ஹட்டன் நெ'னல் வங்கிக்கும் மத்திய வங்கிக்குமிடையில் இடம்பெற்ற மோசடி சம்பந்தமானது |
| 11 | லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி | முறையற்ற கொடுக்கல்வாங்கல் சம்பந்தமானது |
| 12 | மதுவரித் திணைக்களம் | மதுவரித் திணைக்களத்தின் ஊழல் சம்பந்தமானது |

| தொடர் இல. | நிறுவனம் | விசாரணை |
|---|---|---|
| 13 | இலங்கை சுங்கத் திணைக்களம் | சுங்கத் திணைக்களத்தின் சட்டவிரோத நடவடிக்கை சம்பந்தமானது |
| 14 | வியாபார மற்றும் தீர்வைவரித் திணைக்களம் | ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் சம்பந்தமானது |
| 15 | இலங்கை மத்திய வங்கி | வங்கியில் இடம்பெற்ற ஊழல் சம்பந்தமானது |
| 16 | மதுவரித் திணைக்களம் | திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற முறைகேடுகள் சம்பந்தமானது |
| 17 | வ/ப மில்கோ தனியார் நிறுவனம் | தவறுகளைக் கொண்ட மற்றும் முறையற்ற பதவியுயர்வு சம்பந்தமானது |
| 18 | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | அரசாங்கத்தின் பணத்தின் முறையற்ற பயன்பாடு சம்பந்தமானது |
| 19 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | உள்ளகக் கணக்காய்வாளரை வேலையிலிருந்து இடைநிறுத்தியது சம்பந்தமானது |
| 20 | மதுவரித் திணைக்களம் | 7 மதுபானப் போத்தல்களை கொள்ளையடித்தமை சம்பந்தமானது |
| 21 | மதுவரித் திணைக்களம் | னுஊளுடு கம்பனியில் இடம்பெறுகின்ற ஊழல் மற்றும் மோசடி சம்பந்தமானது |
| 22 | மதுவரித் திணைக்களம் | இலஞ்சம் மற்றும் மோசடி சம்பந்தமானது |
| 23 | மதுவரித் திணைக்களம் | திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற முறைகேடுகள் சம்பந்தமானது |
| 24 | கல்வி அமைச்சு | சீருடை விநியோகம் சம்பந்தமானது |

## 2015 ஆம் ஆண்டின் இறுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த விசாரணை நடவடிக்கைகள்

| தொடர் இல. | நிறுவனம் | விசாரணை |
|---|---|---|
| 01 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | அரசாங்கத்தின் வருமானத்தைத் தடுத்து குறுக்கு வழிகளில் பணத்தைத் திரட்டும் அலுவலர்கள் |
| 02 | தபால் திணைக்களம் | நாட்டின் சகல தபால் பிரிவுகளிலும் உள்ள மோசடிகள் |
| 03 | திவிநெகும திணைக்களம் | சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து அறநெறிப் பாடசாலைச் சீருடை விநியோகம் சம்பந்தமானது |
| 04 | விளையாட்டத் துறை அமைச்சு | இலங்கை மல்யுத்தச் சங்கத்தின் நிதி முறைகேடுகள் சம்பந்தமானது |
| 05 | லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் | லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் தற்போதைய நிலை |
| 06 | போக்கஸ் மார்கட்டிங் அன்ட் எஞ்ஜியரிங் | மாவட்டக் கருத்திட்டப் பொறியியலாளர் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை சம்பந்தமானது |
| 07 | மதுவரித் திணைக்களம் | திணைக்களத்தின் புதிய நிருவாகத்திற்கு எதிரான முறைப்பாடு சம்பந்தமானது |
| 08 | மதுவரித் திணைக்களம் | கள்ளுச் சாராயத்திற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது முறையற்ற விதத்தில் செயற்பட்டமை<br>மாதாந்த அனுமதிப் பத்திரத்திற்கான தவணைப் பணத்தை அறவிடாமை |
| 09 | தபால் திணைக்களம் | மோசடியான விதத்தில் இடம் பெறுகின்ற அரசாங்க பணத்தின் சுரண்டல், அனுராதபுர தபால் அலுவலகத்தின் பலவீனமான நிருவாகத்தின் காரணமாக நிதியின் முறைகேடான பயன்பாடு |
| 10 | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் | திணைக்களத்தில் இடம்பெறுகின்ற மோசடிகள் சம்பந்தமானது |
| 11 | இலங்கை காப்புறுதிச் சபை | மோசடிகள் |
| 12 | பேராதனை வைத்தியசாலை | நிதி ஒழுங்குவிதியை மீறியமை |
| 13 | சுகாதார அமைச்சு | வைத்தியசாலையின் சுத்திகரிப்புச் சேவை |
| 14 | தேசிய விஞ்ஞான மன்றம் | அரசாங்கத்தின் பணத்தின் முறையற்ற பயன்பாடு சம்பந்தமானது |


## 3.6 முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் புதிய அணுகுகைகள்

அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்;ராட்சி சபைகள், நியதிச் சட்டமுறைச் சபைகள் மற்றும் கருத்திட்டங்களுக்குரிய வாகனங்கள் சம்பந்தமான தரவுத் தொகுதியொன்றை உருவாக்கிப் பராமரிக்கும் நடவடிக்கைகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சொத்துக்கள் சம்பந்தமான பாதுகாப்பு மற்றும் உள்ளக நிருவாகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அசையும் சொத்தாகிய அரசாங்கத்தின் வாகனங்கள் தொடர்பில் சந்தர்ப்பத்திற்கேற்ற மாற்றங்கள் அதாவது, கொள்வனவு செய்தல், மாற்றுதல், அகற்றுதல் போன்றவை பற்றிய தகவல்களை இற்றைப்படுத்தி வாகனங்கள் சம்பந்தமான பாதுகாப்பு உறுதிப்படும் வகையில் தொடர்ச்சியான பரிசீலனைகளை மேற்கொள்வது இதன் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தரவுத் தொகுதியை நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மிகவும் விருத்திசெய்யப்பட்ட தரவுத் தொகுதியாக மேம்படுத்துவதற்கும் அதன் மூலம் அரசாங்கத்தின் வாகனங்கள் பற்றி சரியான காலத்திற்கேற்ற தகவல்கள் தேவைப்படுகின்ற போது பெற்றுக்கொள்வதற்கு உள்ள ஆற்றல்களை அடைந்துகொள்வதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

# 04. மனிதவள முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகம்

## 4.1. 2015.12.31 ஆம்திகதி திணைக்களத்தின் அமைப்புரீதியான கட்டமைப்பு




அ.ப.உ. – 4 , சாரதி -5 , அ.உ - அபிவிருத்தி உத்தியோகத்தர் , மு.உ - முகாமைத்துவ உதவியாளர்

பி.மு.உ. - பிரதான முகாமைத்துவ உதவியாளர்

## 4.2. பதவியினர்

2015.12.31 ஆம் திகதியில் பதவியினர்

| பதவி | பதவியணி | | |
|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| பணிப்பாளர் (இ.நி.சே.) | 01 | - | 01 |
| பணிப்பாளர் (இ.க.சே.) | 05 | 05 | - |
| பணிப்பாளர் (இ.தி.சே.) | 02 | 01 | 01 |
| உதவிப்/ பிரதிப் பணிப்பாளர் (இ.க.சே.) | 07 | 03 | 04 |
| ஆராய்ச்சி உதவியாளர் / அபிவிருத்தி உதவியாளர் | 06 | 06 | - |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 14 | 14 | 00 |
| சாரதி | 07 | 04 | 03 |
| அலுவலகப் பணி உதவியாளர் | 04 | 04 | - |
| **மொத்தம்** | **48** | **39** | **09** |

### 2015 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று திணைக்களத்திற்கு வந்த அலுவலர்கள்

| | பெயர் | பதவி | வந்த திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. ஏ.ஆர். செனவிரத்ன பண்டா | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 29.04.2015 |
| 2. | திரு. சீ.ஜே.கே. பெரேரா | பணிப்பாளர் - இ.க.சே. | 18.02.2015 |
| 3. | திருமதி. ஜே.எச்.பிரனாந்து | உதவிப் பணிப்பாளர் | 18.11.2015 |
| 4. | திருமதி. பீ.ரீ.என் மாலி | உதவிப் பணிப்பாளர் | 30.12.2015 |
| 5. | திருமதி. கே.ஏ.டீ.ஆர்.ரீ. ஹந்தவஆரச்சி | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 18.02.2015 |
| 6. | செல்வி.டப்ளியு.ஜீ. மனோஜா | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 03.11.2015 |
| 7. | திரு. ஜே.பீ. முதலிகே | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 05.02.2015 |
| 8. | திருமதி. டீ.எஸ்.பீ. விக்ரமரத்ன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 11.05.2015 |

| | | | |
|---|---|---|---|
| 9. | திருமதி. டப்ளியு.ஏ.பி.டீ. விதானாரச்சி | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 11.05.2015 |
| 10. | திருமதி. ஜே.ஏ. சந்தியா | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 12.05.2015 |
| 11. | திரு. டீ. துசித் சந்திம | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 01.06.2015 |
| 12. | திரு. ஜே.ஏ.ஜீ.என். ஜயகொடி | அலுவலகப் பணி உதவியாளர் | 02.11.2015 |
| 13. | திரு. ஏ.பீ.ஏ. ரத்னசிறி | சூரதி | 20.04.2015 |
| 14. | திரு. சந்தன பெரேரா | சூரதி | 04.09.2015 |
| 15. | திரு. டப்ளியு.ஆர். ஜயன்த | சூரதி | 30.09.2015 |

புதிய நியமனம் பெற்றவர் செல்வி. கே.பீ.ஆர்.டீ. கருணாநாயக்க **- 2015.09.15**

## 2015 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்கள்

| | பெயர் | பதவி | சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. டீ.யூ.எஸ். விக்ரமாரச்சி | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 21.04.2015 |
| 2. | திரு. சீ.ஜே.கே. பெரேரா | பணிப்பாளர் - இ.க.சே. | 06.05.2015 |
| 3. | சேல்வி. ஏ.கே. குணசேகர | பணிப்பாளர் - இ.தி.சே. | 01.04.2015 |
| 4. | திருமதி. எஸ்.எம்.ரீ. நிராஷா | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 22.11.2015 |
| 5. | திருமதி. பிவினி விஜேவர்தன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 06.02.2015 |
| 6. | திருமதி. டப்ளியூ.பீ. கல்யாணி குணரத்ன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 15.05.2015 |
| 7. | திரு. ஏ.பீ.ஏ. ரத்னசிறி | சாரதி | 12.05.2015 |
| 8. | திரு. ஜே.எம்.எல். பு'ஷ்பகுமார | சாரதி | 31.05.2015 |
| 9. | திரு. எச்.எம்.எம். ரத்னசிறி | சாரதி | 25.08.2015 |
| 10. | திரு. ஏ. சந்தன பெரேரா | சாரதி | 01.10.2015 |
| 11. | திரு. ஏ.பீ. நாலக சந்தன | அ.ப.உ. | 23.10.2015 |

## 4.3. 2015 ஆம் ஆண்டினுள் பயிற்சி மற்றும் திறன் விருத்தி நடவடிக்கைகள்

### 4.3.1. 2015 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு பயிற்சி

| அலுவலரின் பெயர் | பதவி | இடம்பெற்ற நாடு | பயிற்சி கற்கைநெறி | காலம் |
|---|---|---|---|---|
| **திருமதி. எஸ்.ஏ.சீ. குலதிலக** | பணிப்பாளர் நாயகம் | மலேசியா | ADB Regional Forum on public Sector Accounting – Invitation to attend the 2015 Regional workshop | **2015.08.24 - 2015.08.25** |
| | பணிப்பாளர் நாயகம் | மலேசியா | Overseas Training Program for Executive Official – 2015 Leadership, Communication & Interpersonal Skills Leadership through Self-Master | **2015.08.29 - 2015.09.07** |
| | பணிப்பாளர் நாயகம் | சுவிட்சலாந்து | Intergovernmental working group of experts on International standards of Accounting and Reporting 32nd Session Geneva | **2015.11.04 - 2015.11.06** |
| **திரு. ஏ.ஆர். செனவிரத்ன பண்டா** | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | மலேசியா | Overseas Training Program for Executive Official – 2015 The Oxford Advanced Finance programme | 2015.09.12 - 2015.09.22 |
| **திரு. ஆர்.ஆர்.கே. நுகபிட்டிய** | பணிப்பாளர் | மலேசியா | Overseas Training Program for Executive Official – 2015 Leadership, Communication & Interpersonal Skills Leadership through Self-Master | **2015.08.29 - 2015.09.07** |
| **திரு. எஸ்.எம். தயாரத்ன** | பணிப்பாளர் | மலேசியா | -அதே- | 2015.08.29 - 2015.09.07 |
| **திரு. டீ.ஜீ.ஜீ.எஸ் தயானாத்** | பணிப்பாளர் | மலேசியா | -அதே- | 2015.08.29 - 2015.09.07 |

| அலுவலரின் பெயர் | பதவி | இடம்பெற்ற நாடு | பயிற்சி கற்கைநெறி | காலம் |
|---|---|---|---|---|
| **திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த** | பணிப்பாளர் | மலேசியா | Overseas Training Program for Executive Official – 2015 The Oxford Advanced Finance programme | 2015.09.12 - 2015.09.22 |
| **திரு. ஏ.என். ஹபுகல** | பணிப்பாளர் | மலேசியா | Overseas Training Program for Executive Official – 2015 The Oxford Advanced Finance programme | 2015.09.12 - 2015.09.22 |
| **திரு.எஸ்.கே. குசலகுமாரன்** | பணிப்பாளர் | மலேசியா | Overseas Training Program for Executive Official – 2015 The Oxford Advanced Finance programme | 2015.09.12 - 2015.09.22 |
| **திருவதி. வீ.ஜ. தில்ஹானி** | உதவிப் பணிப்பாளர் | ஜப்பான் | Japan Grant Aid for Human Resource Development Programme - 2015 | **2015.08.16** - **2017.08.16** |
| **திருமதி. டப்ளியு.கே.பீ.எச்.என்.எஸ். ருத்ரிகோ** | அபி. உத்தியோகத்தர் | மலேசியா | Overseas Training Program for Executive Official – 2015 The Oxford Advanced Finance programme | 2015.09.12 - 2015.09.22 |

### 4.3.2. **2015 ஆம் ஆண்டினுள் உள்நாட்டு பயிற்சி**

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| பயிற்சி கற்கைநெறி / நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் | அலுவலரின் பெயர் | பதவி |
|---|---|---|---|
| **முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உயர் டிப்ளோமா கற்கைநெறி** | 2015.01.22 முதல் 05 வருடங்கள் | திரு. டப்ளியு.ஜீ.ரீ. சானக | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| **Behavioural Economics and Policy Design** | 2015.02.25 மற்றும் 26 | திரு. ஏ.என். ஹபுகல<br>திருவதி. ஏ.கே. குணசேகர<br>திருமதி. டப்ளியு.டீ.எஸ்.கே. அலகியவன்ன | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>அபி. உத்தியோகத்தர் |
| **அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குவிதி** | 2015.03.16/17 | திருமதி.கே.எச்.எம். கபுவத்த<br>திருமதி. எஸ்.எம்.ரீ. நிரா`ா | அபி. உத்தியோகத்தர்<br>அபி. உத்தியோகத்தர் |
| **Asian Leadership Forum 2015** | 2015.06.01 | திரு.எஸ்.கே. குசலகுமாரன் | பணிப்பாளர் |
| **Training on Sri Lanka Public Sector Accounting Standards ( SLPSAS)** | 2015.06.12 | திரு. ஆர்.ஆர்.கே. நுகபிட்டிய<br>திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த<br>திரு. எஸ்.எம். தயாரத்ன<br>திரு. ஏ.என். ஹபுகல<br>திரு.எஸ்.கே. குசலகுமாரன் | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர் |

| பயிற்சி கற்கைநெறி / நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் | அலுவலரின் பெயர் | பதவி |
|---|---|---|---|
| **Coorporate Fraud Detection and Forensic Accounting training** | 2015.07.15 | திருமதி. எஸ்.ஏ.சீ.குலதிலக<br>திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த<br>திரு.எஸ்.கே. குசலகுமாரன் | பணிப்பாளர் நாயகம்<br>பணிப்பாளர் பணிப்பாளர்<br>பணிப்பாளர் |
| **களஞ்சியப்படுத்தல் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி** | 2015 .07.30 ஆம் திகதி முதல் 05 புதன் கிழமை நாட்கள் | திரு. பீ.டப்ளியு.பி.எம். விமலசந்திர | அ. மு. உ. |
| **கணினி வன்பொருள் பற்றிய பயிற்சி** | 2015.08.10/11 | திருமதி. ஜீ.டீ.கே. லியனகே<br>திருமதி. ஈ.எம்.ஜீ.எல். ஏக்கநாயக்க | அ. மு. உ.<br>அ. மு. உ. |
| **ஈ-அரசாங்க எண்ணக்கரு மற்றும் அலுவலக முகாமைத்துவத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு பற்றிய செயலமர்வு** | 2015.08.26 හා 27 | திருமதி. ஈ.எம்.ஜீ.எல். ஏக்கநாயக்க | அ. மு. உ. |
| **களஞ்சியப்படுத்தல் பற்றிய உயர் சான்றிதழ் கற்கைநெறி** | 2015.08.28 ஆம் திகதி முதல் 10 வெள்ளிக் கிழமை நாட்கள் | திரு. பீ.டப்ளியு.பி.எம். விமலசந்திர | அ. மு. உ. |
| **Advance Analysis Tools in Excel** | 2015.10.09 | திருமதி. ஜீ.டீ.கே. லியனகே<br>திருமதி. ஈ.எம்.ஜீ.எல். ஏக்கநாயக்க | அ. மு. உ. |
| **Procurement Management** | 2015.10.09 | திருமதி. டப்ளியு.கே.பீ.எச்.என்.எஸ். ருத்ரிகோ<br>திருமதி. டீ.எஸ்.பீ. விக்ரமரத்ன<br>திருமதி. ஜே.ஏ. சந்தியா<br>திரு. ஜே.பீ. முதலிகே | அபி. உத்தியோகத்தர்<br>அ. மு. உ.<br>அ. மு. உ.<br>அ. மு. உ. |

### 4.3.3 செயலாற்றுகை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் மொத்தப் பதவியினர்களினதும் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக ''முகாமைத்துவக் கணக்காய்வின் அபாய முகாமைத்துவம்'' சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று 2015.12.31 ஆம் திகதியன்று நடாத்தப்ப